பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 11 2025 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) பிரதமர் திரு நரேந்திர மோடி, மும்பை — அகமதாபாத் புல்லட் ரயில் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்து குஜராத்தின் சூரத்தில் இன்று ஆய்வு செய்தார்.

2) வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்ப்பது, நீக்குவதற்கான அடையாள ஆவணமாக ஆதார் பயன்படுத்தப்பட மாட்டாது என்று தேர்தல் ஆணையம் உச்சநீதிமன்றத்தில் கூறியுள்ளது.

3) இந்திய ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு தொழில்துறை 2030-ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலர் அளவுக்கு வளர்ச்சியடையும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4) ரஷ்யாவின் முக்கிய எண்ணெய் முனையம் மீது யுக்ரைன் தாக்குதல் நடத்தியுள்ளது.

5) இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டநேர இறுதியில் தென்னாப்பிரிக்கா தனது இரண்டாவது இன்னிங்சில் 7 விக்கெட் இழப்பிற்கு, 93 ரன் எடுத்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, மும்பை — அகமதாபாத் புல்லட் ரயில் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்து குஜராத்தின் சூரத்தில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

சூரத் ரயில் நிலைய கட்டுமானப்பணிகளை பார்வையிட்ட அவர், அங்கு பணியாற்றும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

**508** கிலோ மீட்டர் தொலைவுக்கான இத்திட்டம், நாட்டின் போக்குவரத்து கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் செயல்படுத்தப்படுகிறது.

முன்னதாக, பழங்குடியினர் பெருமை தினத்தையொட்டி, **Devmogra** பகுதியில் உள்ள பழங்குடியினரின் தெய்வமான **Pandori** மாதா கோவிலில் பிரதமர் வழிபாடு செய்தார்.

<<<<<<<>>>>>>

வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்ப்பது, நீக்குவதற்கான அடையாள ஆவணமாக ஆதார் பயன்படுத்தப்பட மாட்டாது என்று தேர்தல் ஆணையம் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்ப தீவிர திருத்தப்பணிகளை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், நீதிபதி திரு சூரியகாந்த் முன்னிலையில் தேர்தல் ஆணையம் பிரமாணப் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

வாக்காளரின் அடையாளத்தை அறிந்துகொள்வதற்கான சான்றாக மட்டுமே ஆதார் எடுத்துக்கொள்ளப்படுவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

குடியுரிமை, வசிப்பிடம் அல்லது பிறப்பு சான்றிதழாக ஆதார் அட்டை, கருதப்பட மாட்டாது என இந்திய தனித்துவ அடையாள அட்டை ஆணையம் தெளிவுபடுத்தியிருப்பதையும் தேர்தல் ஆணையம் தனது பிரமாணப்பத்திரத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

<<<<<<<>>>>>>>

அரிய கனிமங்கள் துறையில் இந்தியாவுடன் ஒத்துழைக்க வெனிசுலா அரசு ஆர்வம் தெரிவித்துள்ளது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இந்திய தொழில் கூட்டமைப்பு மாநாட்டின் இடையே மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயலுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது, வெனிசுலா அமைச்சர் திரு **Hector Silva,** அந்நாட்டில் அரிய கனிமங்களை வெட்டி எடுப்பதில் இந்திய தொழில்துறையினர் முதலீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாக வர்த்தக அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

கோவாவில் நடைபெறவுள்ள இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் இளம் படைப்பாளர்கள், பெண் இயக்குனர்களை ஊக்குவிக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

பனாஜியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விழாவில் செயற்கை நுண்ணறிவு சார்ந்த திரைப்பட தயாரிப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றார்.

இந்த விழாவில் இந்திய திரையுலகில் 50 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிவரும் நடிகர்கள் ரஜினிகாந்த், பாலகிருஷ்ணா மற்றும் முதுபெரும் கலைஞர்களான குருதத், பானுமதி உள்ளிட்டோர் கௌரவிக்கப்பட உள்ளனர்.

<<<<<<<>>>>>>

இந்திய ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு தொழில்துறை 2030-ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலர் அளவுக்கு வளர்ச்சியடையும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இத்தொழில்துறை நாட்டில் வேகமாக வளர்ந்து வருவதாகவும், டிஜிட்டல் புதுமை கண்டுபிடிப்புகள் இதில் பெருமளவு பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொழிலில் ஈடுபடும் படைப்பாற்றல் தொழில்முனைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், ஆண்டுக்கு ஏழு சதவீத அளவிற்கு இது வளர்ச்சியடைந்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில், ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு தொழில்துறை குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருப்பதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

அறிவியல் அருங்காட்சியகங்களுக்கான தேசிய கவுன்சிலுக்கு, அருங்காட்சியகங்கள் மற்றும் அறிவியல் தொழில்நுட்ப கலைப்பொருட்களுக்கான சர்வதேச கமிட்டியின் CIMUSET விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

துபாயில் நடைபெற்ற அருங்காட்சியகங்களுக்கான சர்வதேச கமிட்டியின் மாநாட்டில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

கொல்கத்தாவில் உள்ள அறிவியல் நகரில், பருவநிலை மாற்றம் தொடர்பாக அமைக்கப்பட்ட அரங்கிற்காக இந்த அமைப்பு தேர்வு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

ராஜஸ்தான் மாநிலம் **Sirohi** மாவட்டத்துக்கு உட்பட்ட கிராமத்தில் அம்மாநில காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையில், **40** கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அப்பகுதியில் போதைப்பொருள் தயாரிக்கப்படுவதாக கிடைத்த தகவலின்பேரில், நடத்தப்பட்ட இந்த சோதனையின்போது, இச்சம்பவத்தில் தொடர்புடைய ஐந்து பேர் கைது செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

சுதந்திரப் போராட்ட வீரர் பிர்சா முண்டாவின் **150-**ஆவது பிறந்த தினம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இன்று கொண்டாடப்பட்டது.

உத்தரப்பிரதேச மாநிலம் சோன்பத்ராவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் பங்கேற்று பழங்குடியின மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய யோகி ஆதித்யநாத், தகுதியான பழங்குடியினர் அனைவருக்கும் மாநில அரசின் நலத்திட்டங்கள் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்றார்.

ஜார்கண்ட்டில் பிர்சா முண்டா பிறந்த இடமான **Ulihatu-**வில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அம்மாநில ஆளுநர் திரு சந்தோஷ் குமார் கங்குவார், முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன், மத்திய

பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு ஜுவல் ஓரம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சிங்கப்பூர், நைஜீரியா, நியூசிலாந்து உட்பட பல்வேறு நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களிலும் பழங்குடியினர் பெருமை தினம் கொண்டாடப்பட்டது.

இதனிடையே, தமிழகத்தின் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் நடைபெற்ற பிர்சா முண்டாவின் பிறந்த நாள் விழாவில், பழங்குடியின மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று நடனமாடினர்.

இந்த நிகழ்ச்சி தங்களது கலைத்திறனை வெளிப்படுத்த உதவிகரமாக இருந்தது என்று பழங்குடியின மக்கள் தெரிவித்தனர்.

***(Voice Byte — பழங்குடியினர் — 50 Sec. )***

<<<<<<<>>>>>>

பீகார் மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் குளறுபடி இருப்பதாக காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ள புகாரை தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள விளக்க அறிக்கையில், கடந்த அக்டோபர் 6-ஆம் தேதி வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், 7 கோடியே 42 லட்சம் வாக்காளர்கள்

இருந்ததாகவும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த த்திற்கு பிறகு மூன்று லட்சம் புதிய வாக்காளர்கள் சேர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியான வாக்காளர்களின் பெயரை விடுபடாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையிலேயே, புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<<<>>>>>>

ரஷ்யாவின் துறைமுக நகரான **Novorossiysk-**கில் உள்ள முக்கிய எண்ணெய் முனையம் மீது யுக்ரைன் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதன் காரணமாக, அந்த முனையத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டு, எண்ணெய் ஏற்றுமதி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலை உறுதி செய்துள்ள ரஷ்யாவின் **Krisnodar Krai** மாகாண ஆளுநர் திரு **Veniamin Kondradaev,** ரஷ்ய படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட யுக்ரைனின் ட்ரோன்களில் ஒன்று எண்ணெய் சேமிப்பு கிடங்கில் விழுந்ததாக கூறியுள்ளார்.

இந்த தாக்குதலில் துறைமுகப்பகுதியில் பணியாற்றிக் கொண்டிருந்த நான்கு பேர் காயமடைந்த்டன், துறைமுகத்தையொட்டி இருந்த குடியிருப்புப் பகுதிகளும் சேதமடைந்த தாக என அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, நேற்று இரவு மட்டும், யுக்ரைனின் 216 ட்ரோன்களை வழிமறித்து அழித்திருப்பதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று தென்னாப்பிரிக்கா தனது இரண்டாவது இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் 7 விக்கெட் இழப்பிற்கு, 93 ரன் எடுத்துள்ளது.

கொல்கத்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 189 ரன் எடுத்தது.

தென்னாப்பிரிக்கா முதல் இன்னிங்சில் 159 ரன் எடுத்துள்ளது.

<<<<<<<END>>>>>>